பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மார்கழி 24 (8—1—68) திங்கள் ★ வெளியூர்: மார்கழி 25 (9—1—68) செவ்வாய் [இதழ்: 172

பருப்பு பயிரிடுவோருக்கு அரசு சலுகை

திருச்சி, சன. 8—
தங்களுடைய நிலங்களில் பருப்பு வகைகளைப் பயிரிட முன்வருகின்ற உழவர் பெருமக்களுக்கு விதைகள், உரங்கள் ஆகியவைகளோடு தண்ணீரையும் எத்தகைய கட்டணமும் இல்லாமல் தருவதாக இங்கு மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக குழாய்க் கிணறுகளைத் தோண்டத் தமிழக அரசு திருச்சிமாவட்டத்திற்கு ரூ. 45 இலட்சம் வழங்கியிருக்கிறது.

தளவாடத் தொழிற்சாலைக்கு தக்க இடம் தென்னகமே!

தமிழ்நாட்டுத் திட்டங்களே தக்க அளவுக்குப் பயன் தருகின்றன!

டெல்லி அரசுக்கு அறிஞர் அண்ணா இடித்துரை

சென்னை, சன. 28—
'போர்த்தந்திர முறைப்படி பார்த்தாலும், ஆயுதத் தளவாடத் தொழிற்சாலைகள் எல்லைகளுக்கப்பால் தொலைவில் அமைந்திருக்க வேண்டும்; தென்னகமே அவற்றுக்கு ஏற்ற இடம்; இதை உணர்ந்து மத்திய அரசு, இங்கு மேலும் ஆயுதத் தளவாடத் தொழிற்சாலைகளைத் திறக்க வகை செய்யவேண்டும்-

'தமிழ்நாட்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற ஒவ்வொரு ரூபாய்க்கும் சிறந்த பலன் கிடைக்கிறது; அதாவது, பிற மாநிலங்களில் ரூபாய்க்கு ௦0 காசு அளவுக்குப் பலன் கிடைத்தால் இங்கே ரூபாய்க்கு நூறு காசு வீதம் பலன் கிடைக்கிறது; மத்திய அரசு இதை மனத்தில் கொள்ள வேண்டும். தொழிற்சாலைகள் இங்கு திறக்கப்படுமானால், மாநில அரசு எல்லா உதவிகளையும் செய்திடும்.

'இந்திய அரசினர் கடைபிடித்துவரும் கூட்டுச் சேராக் கொள்கையைப் பொறுத்தமட்டில், அக்கொள்கையின் பெரும் பகுதி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஏற்புடைய ஒன்றுதான்; அநியாயத்தோடு கூட்டுச் சேராமை, 'நியாயத்தோடு கூட்டுச் சேருவது' என்பதாக அது இருக்கவேண்டும்; மத்திய--மாநில அரசுகளுக்கிடையே கூட்டு இருக்கவேண்டும்; ஒத்த கருத்து இருக்க வேண்டும்.

"கூட்டுகளிலெல்லாம் சிறந்த கூட்டு, மக்களோடு சேருகின்ற கூட்டாகவே இருப்பது அவசியம். ஏழை மனிதனுடைய தேவைகள் முதலில் நிறைவேற்றப்பட வேண்டும்; அப்போதுதான், எத்தகைய சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்குத் தான் போராட வேண்டுமென்பதை அந்த ஏழை உணர இயலும்; அந்த நிலை ஏற்பட்டவுடன், அவனை எதிர்த்து எந்த ஆக்கிரமிப்பாளனும் வெற்றிபெற முடியாது"

என்று அறிஞர் அண்ணா அவர்கள், நேற்றிரவு பாதுகாப்புத் துறைப் பொருட்காட்சியினைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

மத்திய செய்தி — ஒலிபரப்புத் துறையும், பாதுகாப்புத் துறையும் சேர்ந்து கூட்டாக ஏற்பாடு செய்துள்ள இப்பொருட்காட்சி ஓர் இரயில்பெட்டித் தொடருக்குள் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்திய இராணுவத்திடம் உள்ள நவீன ஆயுதங்கள், மற்றும் நமது வீரர்களின் போர்த் திறம் ஆகியவைகளை விளக்கிக் காட்டுவதாகும்.

இந்தப் பொருட்காட்சித் திறப்பு விழா, சென்னைக் கடற்கரை இரயில் நிலையத்தில் நடைபெற்றது.

அண்ணா அவர்கள் தமது திறப்புரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இராணுவம், நாட்டின் ஒற்றுமைக்கோர் சின்னமாக விளங்குகிறது.

சாதி—சமய—மொழி—வட்டார வேறுபாடுகளையெல்லாம் மறந்தும், மறுத்தும் இந்தியக் குடியரசின் ஆதிபத்திய உரிமையைப் பாதுகாத்திடுவதில் நமது படைவீரர்கள் காட்டிய வீரம் மகத்தானது! இதைக் கண்டுதான் மற்றவர்களும், 'நம்மால் மட்டும் ஏன் ஒற்றுமையாக இருக்க முடியாது' என்று யோசிக்கத் தூண்டுவதாக உள்ளது!

பிற நாட்டை ஆக்கிரமிக்கும் நோக்கம் நமக்கில்லை; இப்போதுள்ள தகராறுகளும் பேசித் தீர்க்கப்படுமானால், அதில் நாம் மகிழ்ச்சியடைவோம்! ஆனால், நாடு ஆக்கிரமிக்கப்படுவதை ஒருநாளும் சகியோம்! இதற்குத்தான் தயாரிப்பு நிலையில் இருக்கிறோம்!"

கடமை உண்டு-- கணக்குகளும் அறிவிக்கப்படும்

"நான் அமைச்சர் என்றாலும், 'தி.மு. கழகத்தின் பொருளாளன்' என்ற முறையில் பொருளுடன் தொடர்புடையவன். அந்த முறையில் உலகத் தமிழ் மாநாட்டின் ஒவ்வொரு குழுவும் தனது வரவு-செலவுக் கணக்கை நிச்சயம் வெளியிடும்.

"நாங்கள் ஈடுபாடு கொண்ட நிகழ்ச்சிகளிலெல்லாம்பகிரங்கமாக வரவு-செலவுக் கணக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது; அவ்விதம் இந்த நிகழ்ச்சிகளுக்குரிய வரவு-செலவுக் கணக்கும் பகிரங்கமாக அறிவிக்கப்படும்.

"மலர்க் குழுவில், 'வரவு இவ்வளவு-செலவு இவ்வளவு-மீதம் இவ்வளவு' என்பதை அமைச்சர் முத்துசாமி, புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். ஆகியோரைக் கொண்ட குழு வெளியிடும்.

"கண்காட்சிக் குழுவில், 'வரவு இவ்வளவு-செலவு இவ்வளவு-மீதம் இவ்வளவு' என்று அறிவிக்க சா. கணேசன் கடமைப் பட்டிருக்கிறார்!

"அதுபோல், 'கருத்தரங்கில் வரவு இவ்வளவு-செலவு இவ்வளவு-மீதம் இவ்வளவு' என்று அறிவிக்க சுப்பையா பிள்ளை, வி.எஸ். தியாகராச முதலியார் ஆகியோரைக்கொண்ட குழு கடமைப்பட்டிருக்கிறது.

"அதைப்போன்றே, பூம்புகார் நிகழ்ச்சியில், 'வரவு இவ்வளவு-செலவு இவ்வளவு-மீதம் இவ்வளவு' என நீலநாராயணன் முதலியோரைக் கொண்ட குழுவால் அறிவிக்கப்படும்— என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

---மு. கருணாநிதி

ஆற்று நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை

அண்ணா --- நம்பூதிரிபாடு சந்திப்பு

கோவை, சன. 8—
"ஆற்று நீரைப் பகிர்ந்தளிக்கும் பிரச்சினைகள் குறித்து பிப்ரவரி 17-ம் நாளன்று எர்ணாகுளத்தில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவும்—கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடும் சந்தித்து விவாதிப்பார்கள்"

என்று கேரள மாநில நீர்ப் பாசனத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடையே தெரிவித்தார்.

ஆனைமலை, பவானி ஆகிய இரு ஆற்று நீரினைப் பகிர்ந்துகொள்வதில் இரண்டு அரசுக்கும் கொஞ்சம் தகராறுகள் இருப்பதாகவும் நடைபெறவிருக்கின்ற இரு முதல்வர்களின் சந்திப்பின்போது எல்லா தகராறுகளும் தீர்க்கப்பட்டுவிடும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

லாந்து நாட்டுப் பிரதிநிதி பாராட்டினார்.

இதுபோன்று குறட் பாக்கள் பேருந்துகளில் எழுதப்பட்டிருப்பதைத் தாம் உலகல் எப்பகுதியிலும் பார்க்கவில்லை என்றும், பேருந்துகளில் உட்கார்ந்து செல்லுபவர்கள்முன் பொருள் பொதித்த குறளும் — அதனை யாத்த வள்ளுவரின் படமும் வைக்கப்பட்டிருப்பது பயணம் செய்கின்ற அனைவரின் உள்ளத்தையும் எழுச்சியூட்டத்தக்க நிலையில் அமைந்திருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சேக் அப்துல்லாவுக்கு மத்திய அமைச்சர் பதவி?

புதுடில்லி, சன. 8—
மத்திய அமைச்சரவையில் சேருவதன் மூலம், காஷ்மீர் சிக்கல் விரைவிலும் அமைதியான முறையிலும் தீருமென்றால், அவ்விதம் சேரத் தாம் தயாராக இருப்பதாகக் காஷ்மீர் முன்னாள் அமைச்சர் திரு. சேக் அப்துல்லா கூறினார்.

"தலைமையமைச்சர் இந்திரா காந்தி அழைத்தால், அவரது அமைச்சரவையில் சேர நீங்கள் தயார்தானா? என்று ஒரு செய்தியாளர், வேடிக்கையாகச் சேக் அப்துல்லாவிடம் கேட்டார்.

"அதிகாரம், பதவி வேண்டும் என்று நான் விரும்பவில்லை; இந்தியர்கள், காஷ்மீரில் பாகிஸ்தானியர்கள் அனைவருக்கும் அமைதி ஏற்படவேண்டும் என்பதே என் ஆசை" என்று சேக் அப்துல்லா சொன்னார்.

"நீங்கள் இந்தியக் குடிமகனாக-இல்லையா?" எனக் கேட்டபோது அது குறித்துப் பதில் சொல்ல அவர் மறுத்துவிட்டார்; 'சுயநிர்ணய உரிமை, ஒவ்வொரு சுதந்திர குடிமகனுக்கும் அடிப்படை உரிமையாகும்' என்று அவர் சொன்னார்.

உத்தரவால் ஏற்படுவதல்ல ஒற்றுமை!

உதட்டுப் பேச்சு வேண்டாம்-உள்ளார்ந்த செயல் புரிக

டெல்லிக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா ஆய்வுரை

"'இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டும்; அதன் வலிவு வெல்வதற்கரியதாக இருக்க வேண்டும்' என்று நாமெல்லாம் விரும்புகின்றோம்.

"இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவது எப்படி? சட்டத்தின் மூலமோ கட்டளையின் மூலமோ குடியரசுத் தலைவரின் உத்தரவு மூலமோ ஒற்றுமையை ஏற்படுத்திவிட முடியாது!

"ஒற்றுமை என்பது உள்ளம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும்; நமது எண்ணங்கள் ஒன்றிணைந்திடச் செயல்பட வேண்டும்; வெறும் உதட்டளவுப் பேச்சினால் ஒற்றுமை வந்துவிடாது!

"ஒற்றுமையை வளரும் பசுஞ்செடிக்கு நிகராகக் கருதி ஒரு சீராகத் தண்ணீர் விட்டுப் பேணிவந்தால் மட்டுமே அது வளரும்! அதை விட்டுத் தண்ணீரும் வெந்நீரும் மாற்றிமாற்றி ஊற்றினால் செடியின் நிலை என்னவாகும்?"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், குரு கோவிந்த சிங்கின் 301-வது பிறந்தாள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

பேருந்துகளில் குறள் மணம்!

சுவிஸ் நாட்டுத் தமிழறிஞரின் பாராட்டு

தமிழக அரசுப் பேருந்துகளில் வள்ளுவர் உருவப் படம் வைக்கப்பட்டுக் குறட் பாக்கள் எழுதப்பட்டிருப்பதை, இங்கு நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் சுவிட்சர்

(2-ம் பத்தி பார்க்க)

நீதிபெற இயலா நிலை ஏற்படக்கூடாது

சமுதாய நலனே சட்டத்தின் குறிக்கோள்

சட்ட அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, சன. 8—

"சமுதாய நலனே சட்டத்தின் குறிக்கோள் ; மக்களுக்கு உண்ண உணவு—உடுக்க உடை—இருக்க உறையுள் ஆகிய இன்றியமையா வசதிகளைச் செய்து கொடுப்பது தான் சமுதாய நீதி !

"அற வாழ்வுக்குச் சட்டத்தின் துணை வேண்டுமானால், சமுதாய நீதிக்குச் சட்டம் வழிவகுக்க வேண்டும்.

"நாட்டில் நீதியை நிலைநாட்ட வேண்டுமானால், நிர்வாகமும் நீதியான நிர்வாகமாக இருக்கவேண்டும். யாரும் நீதியைப் பெற முடியாத நிலைமை ஏற்படுமானால் அதைக் கண்டு நாங்கள் பொறுத்திருக்க மாட்டோம் !

"மக்களின் நன்மைக்காக இயற்றப்படும் சட்டங்களின் கொள்கைகளை நிறைவேற்றாமல் நிறுத்திவைக்கும் அதிகாரம் அரசியல் சட்டத்தின் மூலம் நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ; இதனால் சமுதாயம் மிகவும் பாதிக்கப்படுவதால், அரசியல் சட்டத்தில் உள்ள இந்தப் பிரிவுகளைத் திருத்த வேண்டுமெனத் தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும்"

இவ்வாறு சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், பூம்புகாரில் நடைபெற்ற நீதிமுறை கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார் ; அவர் மேலும் கூறியதாவது :—

"வெகு விரைவில் நீதிமன்றங்களில் தமிழ் முழக்கம் கேட்கும் ; நீதிமன்ற நடவடிக்கைகள், தமிழிலேயே நடைபெறும்.

"என்னுடைய கவலையெல்லாம், ஆங்கிலத்திலும் இல்லாமல்—தமிழிலும் இல்லாமல் வேற்று மொழி ஒன்றில் நீதிமன்றங்களை நடத்தவேண்டுமென்று சொல்லி விடுவார்களோ என்பதுதான் !

"இந்தியாவின் தலைமை நீதிமன்றத்தில், 'இந்தியில்தான் இனி தீர்ப்புகள் வரும்' எனக் கூறுகிறார்கள் !

"தமிழ் நீதிமன்ற மொழியாகவும், சட்டமன்ற மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக வேண்டுமென்பது இப்போதைய அரசின் ஆவல்.

"தி. மு. கழக அரசு அமைந்தவுடன் அறிஞர் அண்ணா அவர்கள், 'பணத்தின் அடிப்படையில் பாகுபாடு செய்வது கூடாது' எனக் கூறிவிட்டார்கள் !

"ஒருவர் எத்தகைய வாழ்க்கையில் பழக்கப்பட்டவர்—அவரது வாழ்க்கைத்தரம் எத்தகையது—என்பதைப் பொறுத்தே சிறையில் வகுப்பு பிரிக்கப்படுகிறது.

"இதை விளக்க, இப்போது இங்கு வெளியிடப்பட்ட 'சிறை தரும் தேன் கவிதை' நூலில் உள்ள கவிதைகளை எழுதிய சிறைக் கவிகள்—தமிழ்ப் பயின்றவர்கள் என்பதால்—தனி இடம் கொடுத்திருக்கிறோம்.

"தற்காலத்தில், தனி மனித உரிமைக்கும்—பொது நன்மைக்குமிடையேயான நீதிப் போராட்டம் நடைபெறுகிறது ; இதில் நாமனைவரும் நல்ல அக்கறை செலுத்த வேண்டும்."

எம். அனந்தநாராயணன்

கருத்தரங்கிற்குத் தலைமைதாங்கிய தலைமை நீதிபதி திரு. எம். அனந்தநாராயணன், தமது தலைமையுரையில் கூறியதாவது :—

"தமிழகத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழில் நடைபெற வேண்டும் ; குறைந்தபட்சம் குற்ற இயல் நீதிமன்றங்களிலாவது நடவடிக்கைகளை தமிழ் மொழியில் நடத்த வேண்டும்.

நம் நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே நீதி உணர்ச்சி வளர்ந்து வந்திருக்கிறது. நீதிபதிகள் பக்தியுடனும், பயத்துடனும் நீதி வழங்க வேண்டும்.

'எளியவர்களுக்குச் சட்டமில்லை ; வலியவர்களுக்குத்தான் சட்டம் இருக்கிறது' என்ற எண்ணம் மக்களிடத்தில் இருக்கிறது ; இது தவறானது.

ஏழைகளுக்கு சட்ட உதவி அளிக்கவேண்டியது வழக்கறிஞர்களின் கடமை. இதனை முழு அளவில், செய்யவேண்டும்."

சா. கணேசன்

மாநாட்டைத் துவக்கிவைத்து திரு. சா. கணேசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நீதித் துறையில் தமிழகத்தில் பண்டைக் காலத்திலிருந்தே நல்ல நடைமுறைகள் இருந்து வந்திருக்கின்றன.

சாட்சியம் இல்லாத வழக்குகளில் பிரத்தியம் செய்தல் என்ற முறை இருந்து வந்ததாக குடுமியாமலைக் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது."

கே. ஏ. கிருட்டினசாமி

வழக்கறிஞர் கே. ஏ. கிருட்டினசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நீதியை அடிப்படையாகக் கொள்ளாத எந்தச் சட்டமும், காலதேவனால் தூக்கியெறியப்படும்.

மராட்டிய மாவீரரென்று போற்றப்பட்ட பாலகங்காதர திலகருக்கு நீதிமன்றத்தில் ஆயுள் சிறைத் தண்டனை விதித்தார்கள் ; தெளிவோடு—தூய்மையோடு அன்று அவர், 'தேவை என்பது சட்டத்தைக் காட்டிலும் மிகுந்த வலிவானது' என்றார்.

அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத சட்டங்கள் நிர்மூலமாக்கப்படும்.

பண்டைத் தமிழ் ஏடுகளில் நாம் காணும் நீதி, தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது.

நீதி வழங்குவதில் தவறு நேர்ந்தால் தனக்குத்தானே தண்டனை வழங்கிக்கொள்ளும் மாண்பினை பாண்டியன் நெடுஞ்செழியன், பொற்கைப் பாண்டியன், நன்னன் என்ற குறுநில மன்னன் ஆகியோரது வரலாறுகளில் பார்க்கிறோம் !

மன்னர்கள் நடுநிலைமை தவறாதவர்களாக இருந்ததால்தான், 'இறைவர்கள்' என அவர்கள் போற்றிப் பாராட்டப்பட்டனர்."

இரெ. இளம்வழுதி

வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற உயரிய தத்துவத்தை உலகுக்களித்த திருக்குறளைக் கொண்டவர்கள் நாம் !

நம் கவிஞர் பெருமக்களெல்லாம் கண்ட கனவு நனவாக்கும் பொற்காலம் ஏற்பட்டுள்ளது !

தன் தண்டனைக்குரிய குற்றங்கள் புரிவோரில், 'வாழ்க்கை—அந்தஸ்து' காரணமாக—ஒரு சிலருக்குச் சிறையில் உயர் வகுப்பு அளிப்பது நீதியாகாது."

ஏ. பழனிசாமி

சட்டக் கல்லூரித் தலைவர் திரு. பழனிசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"'விதிகள்' என்ற பெயரில் பண்டைத் தமிழகத்தில் சட்டம் இருந்திருக்க வேண்டும் ; அதற்கான இலக்கியச் சான்றுகள் இருக்கின்றன.

பழந்தமிழ் நாட்டில் குற்றங்களை வகுத்துக்கூறி தண்டனையும் வழங்கி செம்மையுற நீதி செலுத்தியுள்ளனர் ; அறங்கூர் அவயங்களில் 'அப்பீல்' எனும் மேல் முறையீடு ஆகியவை இருந்துள்ளன.

வழக்கு—எதிர்வழக்கு ஆகியனவற்றை ஏழு முறை கேட்டு, சரியும் சான்றும் ஆய்ந்து நீதி வழங்கல் அக்காலத்தில் இருந்துள்ளது."

தில்லை வில்லாளன்

வழக்குரைஞர் தில்லை வில்லாளன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சிவில் வழக்குகள் தீர்ப்பு கூறப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், அச்சட்டத்திலுள்ள ஓட்டைகள்தான் ; அக்குறைகளைப் போக்க முயற்சிக்கவேண்டும்."

மா. சண்முகசுப்பிரமணியம்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும், 'நீதி' என்ற சொல்,

(4-ம் பக்கம் பார்க்க)

'இளம் சந்ததியினரின் திட்டங்களை நிறைவேற்ற நிதி வசதி அவசியம்'

'துண்டுவிழும் தொகையை ஈடு செய்ய உதவுவீர்'

அனைத்துத் துறையினருக்கும் முதலமைச்சர் அண்ணா வேண்டுகோள்

சென்னை, சன. 8—

1968—69-ம் ஆண்டின் தமிழக அரசின் திட்டத்தில் துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட—அரசின் சிறு சேமிப்பு நிதி இயக்கத்திற்கு உறுதுணையாக இருக்க முன்வரவேண்டுமென முதலமைச்சர் அண்ணா அவர்கள், தொழிலதிபர்கள்—திரைப்பட அதிபர்கள்—வணிகப் பெருமக்கள்—நிறுவன நிர்வாகிகள்—ஆசிரியர்கள்—மாணவர்கள்—மற்றும் குடிமக்கள் முதலான எல்லாத் துறையினருக்கும் விடுத்த வேண்டுகோளில் விளக்கியிருப்பதாவது :—

"தமிழகத் திட்டத்தின் அசல் இலக்கு ரூ. 135 கோடி ; இதை ரூ. 65 கோடிக்குக் குறைத்ததுடன்—பெரிய திட்டத்திற்கான நிதி வசதிகளை இந்த அரசு தேடிக்கொண்டாலும்கூட—மத்திய அரசின் ஒதுக்கீடு ரூ. 42 கோடியாகவே இருந்துவரும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

"தமிழக அரசு, திட்டத்தை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து குறைத்துள்ளது. திட்டத்தின் அளவு ரூ. 83 கோடி என அமைத்துள்ளது. இப்போதுள்ள நிலவரத்தில், ரூ. 23 கோடி அளவுக்கு நிதி வசதிகளைத் திரட்டிக்கொள்ள இயலும் என்று நிதி இலாகா மதிப்பிட்டுள்ளது. மத்திய அரசு தரும் ரூ. 42 கோடியுடன் சேர்த்து திட்டத்துக்கு மொத்தம் ரூ. 65 கோடி கிடைக்குமென்பதே இப்போதைய நிலை. இந்நிலையில்தான் சிறு சேமிப்புகள் மூலம் இன்னும் அதிகப்படி நிதி வசதிகளைத் தேடிக்கொள்ளும் பொருட்டுப் பொதுமக்களின் ஆதரவை நாடுகிறேன்.

"நிதி வசதிகளைத் திரட்டுவதற்காகப் புது வரிகளை விதிப்பதென்பது அரசுக்கு எளிதுதான் ; ஆனால் அவ்வாறு செய்வது, அறம்—நியாயமான கோட்பாடுகளுக்கு முழுதும் இயைந்ததாக இருக்காது. மக்கள் தரும் சிறு சேமிப்புகளைக்கொண்டு திட்டத்துக்கான பணத்தைத் தேடிக்கொள்வது அறமாகும்.

"அரசாங்கம் நிதி வசதியைக் கோரினால் உடனே மக்களின் மனத்தில் 'அதிகாரத் தோரணையில் கேட்கிறார்கள்' என்ற தவறான எண்ணத்தை உண்டாக்கிவிடும் ; 'எல்லாம் பொது நன்மைக்காகவே' என்று மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். பிற்காலத் தலைமுறையினருக்காக—இளம் சந்ததிகளுக்காக திட்டங்களை நிறைவேற்ற நிதி வசதி தேவைப்படுகிறது என்பதைத் தெளிவுறுத்த வேண்டும். அப்போது தானாகவே இயக்கத்தில் வேகம் பிறக்கும் !"

'திட்டமிட்டுச் செயலாற்றினால் நிச்சயம் பலன் கிடைக்கும்'

சிறு சேமிப்பு இயக்கம் நன்கு பரவ முதலமைச்சர் அண்ணா அரும் யோசனை

எம். ஜி. இராமச்சந்திரனின் உறுதிமிக்க நம்பிக்கை

சென்னை, சன. 8—

சிறு சேமிப்புகள் இயக்க ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள், சிறு சேமிப்பு நிதிக்குப் பணம் திரட்டுவது குறித்து ஆலோசனை நடத்த தொழிலதிபர்கள் கூட்டமொன்றைக் கூட்டினார்.

சன. 6-ம் நாள், இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தொழிலதிபர்கள்—நிறுவன நிர்வாகிகள்—வணிகப் பெருமக்கள்—திரைப்பட அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அனைவரையும் வரவேற்று, திரு எம். ஜி. இராமச்சந்திரன் பேசியதாவது :—

"சமுதாயத்தில் ஒரு சாராரின் முயற்சியால் மட்டும் மாநிலத்தின் பொருளாதாரம் முன்னேற இயலாது ; மக்கள் சமூகத்திலுள்ள எல்லாப் பிரிவினருடையவும் ஒருமித்த முயற்சி அவசியம்.

"தொழிலதிபர்களும் — திரைப்படப் பிரமுகர்களும்—பொதுமக்களும் ஒத்துழைத்தால் சிறு சேமிப்பு மூலம் ஆண்டுக்கு ரூ. 50 கோடி திரட்ட முடியு[ம்]மென நான் திடமாக நம்பு[கி]றேன்.

"பட அதிபர்கள், தாங்கள் எடு[க்]கும் படங்களில், சிறு சேமிப்பு சம்பந்தப்பட்ட [காட்சி]களை... சேர்க்க வேண்டுமெனக் கே[ட்]டுக் கொள்கிறேன்.

"முதலமைச்சர் அண்ணா அ[வர்]கள், எனக்கு இந்தப் பதவி[யை] அளித்தபோது, 'சிறுவர்க[ள்] நல்ல முறையில் வளருவதற்[கு] சிறு சேமிப்புத் திட்டம் அ[வசி]யம் ; இதற்கான முயற்சி[யில்] ஈடுபடுமாறு எனக்கு ஆ[ணை]யிட்டார். அவருடைய ஆ[ணை]க்கேற்ப, பல ஊர்களில் மாண[வர்]களையும், ஆசிரியர்களையும் ச[ந்]தித்துப் பேசினேன் ; அவர்களும் சிறு சேமிப்பு இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

"மாணவர்களிடையே சிறு சேமிப்புப் போட்டியை ஏற்படுத்திப் பரிசுகள் அளித்தால், பொறுப்புணர்ச்சியும் ஒழுங்கும் உருவாக இயலும்."

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி ஆகியோரும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சிறு சேமிப்புத் திட்டத்துக்குப் போடும் பணத்துக்கு வட்டி விகிதம் குறைவாக இருக்கிறதே என்ற எண்ணம் பலருக்கு ஏற்படலாம். சிறு சேமிப்புத் திட்டம், இலட்சக்கணக்கான மக்கள் ஆதரவுடன் செயல்படுவதற்காகப் பின்னப்பட்ட திட்டம் ; எனவே, இதில் வட்டி விகிதத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது.

"இந்தத் திட்டத்தில் தொழிலாளர்களும், அலுவலகங்களில் பணியாற்றுவோரும், ஆசிரியர்களும், மாணவர்களும், திரைப்பட அதிபர்களும் ஈடுபட ஒரு நல்ல வழி கிடைத்தால் நமக்கு அதன்மூலம் நிரந்தர பலன் கிடைக்கும்.

"எம். ஜி. ஆர். அவர்கள், 'சிறு சேமிப்புமூலம் ரூ. 50 கோடி திரட்டமுடியும்' என்றார் ; சிந்தித்துப் பார்த்தால், அவர் சொல்லியதை, கற்பனை என்று நாம் தள்ளிவிட முடியாது. நாம் திட்டமிட்டுச் செயல்பட்டால் நிச்சயம் அந்தப் பணம் கிடைக்கும்.

"எடுத்துக்காட்டாக, மாவட்டங்கள்தோறும் சென்று எம். ஜி. ஆர். அவர்கள், பத்து இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டம் பற்றி எடுத்துரைத்தால்—சிறு சேமிப்புப் பத்திரங்களை விற்றால்—இந்தத் தொகையை எட்டிவிட இயலும்.

"திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் அவரது உதாரணத்தைப் பின்பற்றுவார்களானால், சிறு சேமிப்பு இயக்கம் வெற்றி பெறுவது உறுதி.

"திரைப்பட அதிபர்கள், எம். ஜி. ஆர். கூறிய யோசனையை ஏற்றுச் செயல்படத் தவ[ற]மாட்டார்கள் என நம்புகிறேன் ; சிறு சேமிப்பு சம்பந்தமான படங்களை எடுத்து அவர்களுடைய படங்களுடன் போட்டுக் காட்டினால், சிறு சேமிப்பு இயக்கம் மக்களிடையே நன்கு பரவ வழி ஏற்பட்டுவிடும்."

தமிழ்நாட்டுக்கு மாபெரும் எதிர்காலம் காத்திருக்கிறது!

கடின உழைப்பும் திறமையான நிர்வாகமும் இங்கே காண்கின்றன!

குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் கருத்துரை

சென்னை, சன. 6—

“தமிழ்நாட்டுக்கு மாபெரும் வருங்காலம் காத்திருக்கிறது என்ற புதிய நம்பிக்கை என்னுள் நிரம்பிவிட்டிருக்கிறது!

“முன்னேற்றத்தையும் வளமையையும் உருவாக்குகின்ற பொருள்கள் அனைத்தையும் நீங்கள் பெற இருக்கிறீர்கள்!

“பெரிய கலாச்சார - அறிவியல் பின்னணியில் அமைதியை விரும்பும் விவேகமான — கடின உழைப்பாளி மக்கள் இங்கு இருக்கிறார்கள்; தங்களது பொறுப்புக்களை அறிந்த - விவரம் தெரிந்த மக்களின் பயனுள்ள - நிலையான அரசைப் பெற்றிருக்கிறீர்கள்!

“திறமையான நிர்வாகம் உங்களிடம் இருக்கிறது! விவசாயம், தொழில், கல்வி ஆகிய துறைகளிலும் பிற துறைகளிலும் நீங்கள் படிப்படியான முன்னேற்றம் கண்டிருப்பதில் வியப்பில்லை!

“நீங்கள் இதுவரையில் நிகழ்த்தியுள்ள மாபெரும் சாதனைகள் வருகிற ஆண்டுகளில் இன்னும் பெரிய முயற்சிகளை மேற்கொள்ள உங்களைத் தூண்டும் என்று நம்புகிறேன்”

என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் புதிய விடுதியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்; அவர் மேலும் பேசியதாவது:—

“சட்டமன்ற உறுப்பினர்கள், தாங்கள் பேசும் பொருளை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

ஒருசில தெரிந்தெடுக்கப்பட்ட பொருள்களில்தான் தனி அறிவைப் பெறமுடியும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய துறைகளைத் தெரிந்தெடுத்து அவற்றை மிகுந்த கவனத்துடன் பயிலலாம்; இந்த முறையில் பாராளுமன்றச் சிந்தனை எனப்படும் கூட்டுச் சிந்தனை சிறந்ததாக அமையும்.

சரியான பாதைகளில் மக்கள் கருத்தை உருவாக்கி வழிப்படுத்துவது சட்டமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

சொல்லிலும், செயலிலும் வன்முறை இருப்பது, சனநாயகத்திற்கும்—சனநாயக உணர்ச்சிக்கும் பொருத்தமாகாது.

மக்கள் ஆவேசமாய் எழும்போது, சமூக விரோதிகள் அந்த நிலைமையைப் பயன்படுத்திக் குழப்பத்தை ஏற்படுத்தி வாழ முனைகின்றனர்; பொதுவாழ்விலிருந்து இந்த விரோதிகளைத் தனியே ஒதுக்குவது சரியான சிந்தனையாளர் அனைவருடைய கடமையாகும். மக்கள் கருத்திற்குப் போதனை அளிக்கும் இத்துறையில், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் முனைப்பான பங்காற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

சிறந்த முறையில் அறிவு பெருகியுள்ள இந்த யுகத்தில பேச்சு என்றால் சிறிது அறிவோடு கூடிய பேச்சாகத்தான் கொள்ள வேண்டும். பொருளை நன்கு அறிந்திருந்தால்தான் நீங்கள் இதைச் செய்யமுடியும்.

விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத் துறையிலும் தற்கால வாழ்க்கை மிகவும் சிக்கலானதாக ஆகியிருக்கிறது. ஒரு சில தெரிந்தெடுக்கப்பட்ட பொருளில்தான் சிறந்த அறிவைப் பெறமுடியும்.

சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய துறைகளைத் தெரிந்தெடுத்து அவற்றை மிகுந்த கவனத்துடன் பயிலலாம் என்பது எனது யோசனை.

இந்த முறையில், பாராளுமன்றச் சிந்தனை எனப்படும் கூட்டுச் சிந்தனை மேலும் பயனுள்ளதாகவும், சிறந்ததாகவும் அமைந்து, முற்போக்கு சனநாயகமொன்றின் அடித்தளத்தை வலுவாக்கும்.

இந்த விடுதியில் நீங்கள் சேர்ந்து வாழ்ந்து, ஒருவர் கருத்துக்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்வது இந்தப் பொருளில் மிகவும் பயன்படும்.”

புளகாங்கிதமடையும் புலவர் உள்ளம்!

“புலவர்களாகிய நாங்கள் எதிர்பார்த்தோமா? — ‘மருவூர்ப் பாக்கம்’—‘பட்டினப்பாக்கம்’ என்றெல்லாம் வழங்கப் பெறும் என்று நினைத்தோமா?

“‘பட்டினப்பாக்கம்’ என்று ஒரு பகுதியை நாங்கள் அழைக்க வேண்டும் என்றால், எங்களை, ‘பைத்தியப்பாக்கம்’ என்றே அழைப்பார்கள்! ஆனால் இன்று, பேருந்துகள், ‘பட்டினப்பாக்கம்’ என்ற பெயரோடு ஓடுகின்றன!

“தமிழன்கூட, ஆங்கிலேயனைப் போல் போலி மிடுக்குடன், ‘பாரிஸ் கார்னர்’ என்றே அழைத்துவந்தான்; அந்தப் பாரிஸ் கார்னரை, ‘பாரி முனை’ என்றாக்கி—அந்த பெயரோடு பேருந்துகள் ஓடுவதை பெருமிதத்துடன் காண்கிறோம்!

“‘கெல்லிஸ்’ என்று ஓர் இடத்திற்குப் பெயர்; அதற்குப் பொருளே தெரியாது; இப்போது அது, ‘கீள்ளியூர்’ என்று மாற்றப் பட்டிருக்கிறது!

“திருமணத்திலும், கோயிலிலும் தமிழன், பொருள் விளங்காச் சொல்கேட்டு — ‘பொருள் விளங்கவில்லையா? உயர்ந்தது அது; ஆண்டவனுக்குரியது அது’ என்று தொழுத காலம் வீழ்ந்தது!

“பழங்காலப் பெயர்களை நாகரிகச் சிறப்போடு வழங்கும் காலம் வந்தது! புதிய சொல் என்றாலும் — வழங்கினால் — ‘பொருள் தெரியும்’ என்ற சொற்கள் வந்தது!

“இப்படிப்பட்ட நமது நாகரிகச் சிறப்பைப் புதுப்பிக்கும் அமைச்சரவைக்கு நாங்கள் மட்டுமா? இந்தத் தமிழ் உலகமே பாராட்ட - வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறது!”

---மு. வரதராசனார்
(பூம்புகாரில்)

தமிழகச் சட்டமன்றம் நிலைநாட்டியுள்ள கண்ணியம்

ஆளுநர் உஜ்ஜல் சிங் பாராட்டு — முதலமைச்சர் அண்ணா பெருமிதம்!

சென்னை, சன. 6—

“மனத்துக்கு உற்சாகமளிக்கக்கூடிய இத்தகைய விடுதியில் தங்கியிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்தின் உயர் மரபுகளைப் பேணிவருவர் என்று நம்புகிறேன்; வேறு சில சட்டமன்றங்களில் காணப்படும் கண்ணியக்குறைவான செயல்கள் இங்கு ஏற்பட அனுமதிக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் புதிய விடுதித் திறப்பு விழாவில் பேசுகையில் கூறினார்கள்.

இந்தக் கட்டிடத்தைக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் திறந்துவைத்தார்.

தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்ததன்மூலம் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன், ‘தமிழர்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டார்’ என அண்ணா அவர்கள் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

விழாவுக்குத் தலைமைவகித்த மாநில ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் பேசுகையில், தமிழகச் சட்டமன்றம் இயங்கும்விதத்தைப் பாராட்டினார்.

விவாதம் நடத்தும் விதம்—கண்ணியம்—கௌரவம் ஆகியவற்றில் உயர்ந்த தரத்தை நிலைநாட்டியுள்ளது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

கல்வியமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார், சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு. மாணிக்கவேலர் ஆகியோரும் பேசினர்.

(5-ம் பத்தியின் தொடர்ச்சி)

எந்த நூலையும் நான், மதிப்புக் குறைவாகக் கருதமாட்டேன்.

வரி வடிவத்தில் எழுதப்பட்டுள்ளவற்றைப் பொருள் வடிவத்தில், காலத்துக்கேற்பப் புலவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும்.

பண்டை நூல்கள், பத்துத் திரு அவதாரங்களைப் பற்றியும பேசுகின்றனர்; நீண்ட நாளைக்கு நாம், இலக்கியப் பலசரக்கை விற்றுக்கொண்டிருக்க முடியாது! மக்கள் வாழ்க்கைக்கு உதவக்கூடிய—உலகம் ஒப்புக் கொள்ளக்கூடிய இலக்கியச் சரக்காக அவை அமைய வேண்டும்.”

சங்க காலத்திலேயே விஞ்ஞான முன்னேற்றம் கண்டவர்கள் நாம்!

மதுரை பல்கலைக்கழக அடிக்கல்நாட்டுவிழாவில் அறிஞர் அண்ணா உரை

மதுரை, சன. 4—

“சங்க காலத்திலேயே விஞ்ஞான—தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது; இதனைப் பல இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன; மதுரைப் பல்கலைக்கழகம் தக்க ஆராய்ச்சிகளை நடத்தி இந்த உண்மைகளை உலக நாடுகளுக்கு அறிவிக்கும் என்று நம்புகிறேன்”

என, முதலமைச்சர் அண்ணா அவர்கள், மதுரைப் பல்கலைக்கழக அடிக்கல்நாட்டு விழாவில் தலைமையுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் அடிக்கல் நாட்டி உரை நிகழ்த்தினார்; அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் சிறப்பு ‘டாக்டர்’ பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது.

தணிகைவேந்தர் தெ பொ. மீனாட்சி சுந்தரனார், குடியரசுத் தலைவருக்கு வரவேற்பிதழ் படித்தளித்துப் பட்டம் வழங்கினார்,

தமிழகக் கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“ஒரு மொழி அல்லது பண்பாடு, மற்ற மொழி—பண்பாடுகள் மீது ஆதிக்கம் செலுத்த இடமிருக்கலாகாது, இந்நாட்டின் பண்பாட்டை, ஆக்க வழியிலான பயனுள்ள முறையில் ஒருங்கிணைப்பதே இன்றைய தேவை; இதன் விளைவாக, நம் நாட்டவரின் நாகரிகத்தில் சிறந்தவற்றை வெளிக்கொணர முடியும்.

“செயற்கை—இயற்கை வேறுபாடுகளை அகற்றிவிட முடியும்.

“உலக நாடுகளிடையே நமக்குச் சிறப்பிடம் கிடைக்கவேண்டும். நமது பணிகளுக்குரிய மதிப்புக் கிடைக்கவேண்டுமானால், நாம் கல்வித் துறையில் முன்னேற வேண்டும்.

“சங்கம் வைத்துத் தமிழ் வளர்ந்த பண்டைச் சிறப்புப் பெற்ற மதுரை நகரில், இந்தப் பல்கலைக்கழகம் சிறப்பான பணியினைச் செய்து புகழ்பெறும் என்று நம்புகிறேன்.”

மங்கியிருந்த தமிழின் ஒளி பெருகி வருகிறது

முதலமைச்சர் அறிஞர் அண்ணா உ[illegible]

சென்னை, சன. 8—

“தமிழர்கள் தங்கள் வாழ்வையும் மொழியையும் ஒன்றாக இணைத்துக் கொண்டவர்கள்; கருத்துக்களை எடுத்துச் சொல்லும் கருவியாக மட்டும் மொழியைக் கருதாமல், ‘தங்களுக்கு வழிகாட்டிச் செல்லத்தக்க ஆசான்’ என்றும், ‘உள்ளத்திற்கு உணர்ச்சி தரும் நண்பன்’ என்றும் தமிழ் மொழியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்! இதை வடக்கே உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்!

“தங்களுடைய மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில், தமிழர்களுக்குள்ள அக்கறைபோல் வேறு எவருக்கும் அக்கறை இருக்கமுடியாது! மங்கியிருந்த தமிழ் ஒளி பெருகியிருக்கிறது! அந்த ஆர்வம் குன்றாமல் அணைத்துச் செல்லும் வழிகாட்டிகளாக இந்தப் புலவர் குழு திகழ வேண்டும்”

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், பூம்புகார் நகரில் புலவர் குழுவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

“பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்து சுவை மட்டுமல்லாமல் இக்காலத்துக்கேற்ப மக்கள் பயனும் பெறக்கூடியவாறு தெளிவாக உட்பொருளை ஆராய்ந்து, துணிவுடனும் கனிவுடனும் புலவர்கள் எடுத்துச் சொல்லி வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்”

என்று அறிஞர் அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

சிறப்பிக்கப்படுகின்றனர்

“முதல்—இடை—கடைச் சங்கப் புலவர் குழுக்களுக்கு ஒரு முறை உண்டு; அதன்படி புலவர்கள் எண்ணிக்கை 49; அந்த முறைப்படி 49 புலவர்கள் இன்று சிறப்பிக்கப்படுகிறார்கள்”

என்று கூறி, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் புலவர் பெருமக்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

விழாவுக்கு அமைச்சர் கருணாநிதி தலைமைவகித்துப் புலவர் பெருமக்களுக்கு மலர்மாலையணிவித்தார்.

காவலர்கள் தேவை!

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தங்கள் வாழ்க்கையையும், மொழியையும் ஒன்றாக இணைத்துக் கொண்டவர்கள்; தமிழுக்கு ஆபத்து என்றால் அவர்கள், ஆர்த்தெழுந்து நிற்கிறார்கள்! மற்ற மொழிக்காரர்களுக்கு இந்த அளவுக்கு உணர்ச்சி இல்லை!

‘தமிழுக்கு ஆபத்து’ என்கிற உணர்ச்சி ஏற்பட்டதும், நம் அனைவருக்கும் பாதுகாப்பு உணர்ச்சி ஏற்பட்டது! இப்போது தமிழுக்குக் காவல் தேவை—காவலர்களும் [illegible]

தமிழ்ச் சங்க நூல்க[illegible] மூன்று வகையில் பய[illegible]லாம்; முதலாவதாக, [illegible]றின் அருமை பெரு[illegible] படித்து இன்பம் பெறல[illegible] இரண்டாவதாக, பிறநா[illegible]கியங்களுடன் ஒப்பிட்டு [illegible]துக்கு நம் இலக்கியப் [illegible]மையை எடுத்துக் கூறலா[illegible]

மூன்றாவதாக, சமுதாயத்[illegible] அவற்றின் பயனை இ[illegible] வேண்டும்; அதற்காக [illegible] இத்தீவுத் திடலில் [illegible] கூட்டியிருக்கிறோம்.

‘ஒன்றே குலம் ஒருவனே [illegible]’ என்று திருமூலர் அ[illegible] உறுதி கூறினார். [illegible]யிருக்க நான்கு வர்ண[illegible] போது வந்தன? பின்[illegible]தனவா—முன்னால் வ[illegible]

(1-ம் பத்தி பா[illegible]

பூம்புகாரில்.....

மூன்றும் நாள்

சென்னை, சன. 6—

பூம்புகார் மூன்றும் நாள் காலை நிகழ்ச்சிகள், மன்னை புரமசிவம் நாயன இசையுடன் தொடங்கின.

பின், பட்டி மன்றம் துவங்கியது; திரு. மு. இராசாக்கண்ணனார் தலைமைவகித்தார்; 'சிலப்பதிகாரத்தில் அன்பிற் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா?' என்ற தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது.

'கண்ணகிதான் அன்பிற் சிறந்தவள்' என்று திருமதி தியாகராசன், மு. அண்ணாமலை, சத்தியசீலன் ஆகியோர் பேசினர்; 'மாதவிதான்' என்று திரு. நமசிவாயம், திருமதி காமாட்சி குமாரசுவாமி, மி. ச. நடேசன் ஆகியோர் பேசினர்.

பிற்பகல் நிகழ்ச்சிகள்

பிற்பகல் 2-30 மணிக்கு சின்ன சுப்பையாவின் நாயன இசையுடன் விழாத் துவங்கியது.

3 மணிக்கு லம்போதர பாகவதர், தமிழிசை பாடினர்.

3-30 மணிக்கு சொற்பொழிவுத் தொடர், 'நீதி முறை' என்ற தலைப்பில் சா. கணேசன் தொடக்கவுரையுடன் துவங்கியது.

தமிழக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அனந்தநாராயணன் தலைமையுரை நிகழ்த்தினர்; 'நீதி முறை' என்ற பொருள் பற்றி பு. ரா கோகுலகிருட்டினன், ஏ. பழனிச்சாமி, மா. சண்முக சுப்பிரமணியம், இ. ரெ. இளம்வழுதி, தில்லைவில்லாளன், கே. ஏ. கிருட்டினசாமி ஆகியோர் பேசினர்.

தமிழகச் சட்ட அமைச்சர் செ. மாதவன், இவ்விழாவில் பங்கு கொண்டு சிறப்புரையாற்றினர்.

மாலை 5 மணிக்கு இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரால் தமிழிசையும் இரவு 7 மணிக்கு மாடி லட்சுமி – குழுவினரால் நாட்டியமும் நடைபெற்றது.

இரவு 9 மணிக்கு எஸ். வி. சகஸ்ரநாமம் நடித்த 'வடிவேலு வாத்தியார்' என்ற நாடகம் நடைபெற்றது.

நான்காம் நாள்

சென்னை, சன. 7—

பூம்புகார் நான்காம் நாள் நிகழ்ச்சிகள் திருவெண்காடு சுப்பிரமணியம் குழுவினரின் நாயன இசையுடன் துவங்கியது.

'இலக்கியத்தில் புரட்சி' என்ற கருத்தரங்கிற்கு திரு. மனோகரன் எம்.பி. தலைமைவகித்தார்; என். வி. நடராசன் எம்.எல்.சி. தொடக்க உரை நிகழ்த்தினர்.

கருத்தரங்கில் கலந்துகொண்டு மீ. பா. சோமசுந்தரம், இளமுருகு பொற்செல்வி, வெள்ளை வாரணனார், டாக்டர் வ. சுப. மாணிக்கம், துரைமுருகன் பி.ஏ., பேராசிரியர் அம்போலா மாஸ்கரனுஸ், அப்துஸ் சமத் எம்.பி. ஆகியோர் பேசினர்.

காலை நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, மா. முத்துசாமி, இலங்கை அமைச்சர் திருச்செல்வம், பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., க. இராசாராம் எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் வந்திருந்தனர்.

பிற்பகல் நிகழ்ச்சிகள்

பிற்பகல் நிகழ்ச்சி 3-30 மணியளவில் காஞ்சி அண்ணாமலை அவர்களின் நாயன இசையுடன் தொடங்கியது.

சதாசிவம் குழுவினர் தமிழிசை பாடினர்; செல்வி விசயா தமிழ்ப் பாடல்கள் பாடினர்.

அடுத்த நிகழ்ச்சியாகப் பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில், 'விடுதலை வீரர்கள்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

திருச்சிற்றம்பலக் கவிராயர், 'கட்டபொம்மன்' என்ற தலைப்பிலும்; தி. கு. நடராசன், 'மருதிருவர்' என்ற தலைப்பிலும்; கு. மா. பாலசுப்பிரமணியம், 'வ. உ. சி' என்ற தலைப்பிலும்; திருமதி சௌந்தரம் கைலாசம், 'வ.வே.சு. ஐயர்' என்ற தலைப்பிலும்; நா. பாண்டுரங்கன், 'திரு.வி.க.' என்ற தலைப்பிலும்; எஸ்.டி. சுந்தரம், 'பாரதியார்' என்ற தலைப்பிலும் தத்தம் கவிதைகளை அரங்கேற்றினர்.

பின்னர், 'அண்ணா' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது; கவிஞர் ஆனந்தம், 'தலைவர்' என்ற தலைப்பிலும்; பொன்னிவளவன், 'பேச்சாளர்' என்ற தலைப்பிலும்; முத்துலிங்கம், 'நடிகர்' என்ற தலைப்பிலும்; முடியரசன், 'தாய்மொழிக் காவலர்' என்ற தலைப்பிலும்; வேழவேந்தன், 'அன்னை' என்ற தலைப்பிலும்; தமிழ்ப்பித்தன், 'தத்துவ மேதை' என்ற தலைப்பிலும்; அப்துல் ரகிமான், 'முதல்வர்' என்ற தலைப்பிலும்; கொத்தமங்கலம் சுப்பு 'எழுத்தாளர்' என்ற தலைப்பினும் தத்தம் கவிதைகளை அரங்கேற்றினர்.

நீதி பெற இயலா நிலை ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'அறம்' என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது."

கோகுலகிருட்டினன்

அரசு வழக்குரைஞர் பு. ரா. கோகுலகிருட்டினன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழில் நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்ருல்தான், அறிவாளிகள்—ஆற்றல் உள்ளவர்கள் அனைவரும் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க இயலும்.

'நீதி' என்ருலே, இயற்கையோடு ஒட்டி வளருவது எதுவோ அதைத்தான் மக்கள் ஏற்றுக் கொள்வர்!

அரசியல் சட்டம், நம் அடிப்படை உரிமைகளை வகுத்துக் கூறியுள்ளது; அத்தகைய அடிப்படை உரிமைகள், பாதுகாப்புச் சட்டம்—அவசரச் சட்டம்—சட்ட விரோதத் தடுப்பு நடவடிக்கைகள் சட்டம் போன்றவற்ருல் பாழ்படுத்தப்படுகின்றன; இது வருந்தத்தக்கதாகும்.

'ஆண்டவன்' என்று ஒருவன் இருந்தால், அவனுக்கு அடுத்த நிலையில் நீதிபதிகள் வைக்கப்பட வேண்டும்; அவர்களது வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும். இதுவே தமிழக அரசுக்கு என் வேண்டுகோள்."

பூம்புகாரில் ஒரு நாள்

கவிதைப் போட்டியில் பரிசு பெறுவோர்

சென்னை, சன. 7—

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இளங் கவிஞர்களுக்காக பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி நடத்தப்பட்ட 'புகாரில் ஓர் நாள்' கவிதைப் போட்டி முடிவுகள் இன்று அறிவிக்கப்பட்டன.

முதல் பரிசு — பட்டுக்கோட்டையை அடுத்த குருவிக்கரம்பை ஏ. சண்முகம் என்பவர் பெறுகிருர்.

இரண்டாவது பரிசு—திருவாரூர் வ. சோ. ஆடவர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் கோ. திருஞான சம்பந்தம் பெறுகிருர்.

மூன்ருவது பரிசு—கும்பகோணம் கிறுமலர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ம. சந்தானம் பெறுகிருர்;

பாராட்டுப் பரிசுகள் ஏழு பேருக்கு அளிக்கப்படுகின்றன.

முதல் பரிசுக்கு அறிஞர் அண்ணாவின் தங்கப் பதக்கமும்—பாராட்டு இதழும், மற்ற இரண்டு பரிசுகளுக்கு தங்கப் பதக்கங்களும்—பாராட்டு இதழ்களும் வழங்கப்படுகின்றன.

பரிசளிப்பு விழா 10—1—68 மாலை 6-மணியளவில் நடைபெறும்; விழாவிற்கு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமைவகிக்கிருர்; புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., பரிசு வழங்குகிருர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 10 கவிதைகள் தொகுப்பு அமைச்சர் மு. கருணாநிதியின் முன்னுரையுடன் நூல் வடிவில் வெளியிடப்படும்.

ஏறத்தாழ 1,200-க்குமேல் வந்திருந்த கவிதைகளை பேராசிரியர் மா. கி. தசரதன் தலைமையில் இயங்கிய குழு ஆராய்ந்து மேற்கண்ட முடிவுகளைச் செய்தது.

தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விருந்து

எம் ஜி. ஆர். அளித்துச் சிறப்பித்தார்

சென்னை, சன. 7—

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள வந்துள்ள பிரதிநிதிகளுக்குப் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நேற்றிரவு ஒரு விருந்து வழங்கினர்.

அடையாற்றில் உள்ள சத்தியா படப் பிடிப்பு நிலையத்தில் இந்த விருந்து நடைபெற்றது.

இவ்விழாவையொட்டிப் படப்பிடிப்பு நிலையம் தோரணங்களாலும், குறள் பொறித்த அட்டைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இவ்விருந்தில் அறிஞர் அண்ணா முதல் தமிழக அமைச்சர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மற்றும் பேராசிரியர் க. அன்பழகன், ஜெமினி வாசன், இராஜா சர் முத்தையா செட்டியார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உலகத் தமிழ் மாநாட்டுக்காக அயல் நாடுகளிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகள் அனைவரும் விருந்துக்கு வந்திருந்தனர்.

அனைவரையும் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். வரவேற்ருர்.

விருந்துக்குப்பின் செல்வி ஜோதி லட்சுமியின் நாட்டியம் நடைபெற்றது.

விருந்துக்கு வந்திருந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறிய புரட்சி நடிகர், 'பெரிய மாறுதல்' என்ற ஆங்கில நூலை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஒவ்வொருவருக்கும் வழங்கினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை–13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

சென்னையில்—'சுதேசமித்திரன்', ஹிக்கின்பாதம்ஸ், மவுண்ட்ரோடு கென்னடி புக் ஸ்டால் ஆகிய இடங்களிலும், பூம்புகாரிலும் கிடைக்கும்.

பூம்புகார் நகர் நிழ்ச்சிகள்

9—1—68-ம் நாள்

நிகழ்ச்சிகள்

காலை 9-மணி: நாயன இசை—நாமகிரிப்பேட்டை கிருட்டினன்.

9-30 மணி: கவியரங்கம்—பொருள்: 'தமிழ்க் கனவு'; தலைவர்: சுரதா; தமிழழகன், வித்துவான் வே. இலட்சுமணன், செல்வபாரதி, தமிழன்பன், பூங்குன்றன், பொன்னடியான், சுப்பு ஆறுமுகம், எம். கே. ஆத்மநாதன், கே. மாயாண்டி, புத்தனேரி ரா. சுப்பிரமணியம், நாவுக்கரசன் ஆகியோர் முறையே—எல்லோர்க்கும் எல்லாம்; எல்லோரும் ஓர் குலம்: உலக மொழி ஒன்றே; ஒரே உலகம்; பாலைவனமெல்லாம் பட்டணமாக வேண்டும்; நிலவில் நாம்; செயற்கை அரிசி; சாவுக்குச் சாவு; கவலையில்லா மனம்; என்றும் இளமை; கி. பி. இரண்டாயிரம்—என்ற தலைப்புபில் பாடுவர்.

11-30 மணிமுதல் பிற்பகல் 1-மணி வரை: கதம்ப நிகழ்ச்சிகள்—'அவதானம்'—இராமையா; 'நூதன கடம்'—வேதகிரி; 'சங்கு இசை'—மகாலிங்க குருக்கள்.

பிற்பகல் 3-மணி: வில்லுப் பாட்டு—சாத்தூர் பிச்சைகுட்டியா பிள்ளை.

3-30 மணிமுதல் 5-மணிவரை: பட்டிமன்றம்; பொருள்: 'வளரும் தமிழ்'—'அரசியலே தமிழை வளர்க்கிறது' என்ற தலைப்பில் செ. கந்தப்பன் எம்.பி., ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., என். வி. என். சோமு ஆகியோரும்; 'கல்வியே தமிழை வளர்க்கிறது' என்ற தலைப்பில் தி. இரா. அரங்கராசன் எம்.ஏ., திருமதி செயா முனிசாமி எம் ஏ., இராசமனோகரன், கணேச கோபால கிருஷ்ணன் ஆகியோரும்; 'பத்திரிகைகளே தமிழை வளர்க்கின்றன' என்ற தலைப்பில் தி. நாரண துரைக்கண்ணன், ஔவை து. நடராசன் எம்.ஏ., எம்.லிட்., மா. செங்குட்டுவன், கு. விசுவநாதன் ஆகியோரும் பேசுவர்; தலைவர்: மாண்புமிகு கே. ஏ. மதியழகன்.

மாலை 5-மணிமுதல் 6-30 மணி வரை: சொற்பொழிவுத் தொடர்—பொருள்: 'தமிழின் பொற்காலம்'; தொடக்கவு[rை] இரா. செழியன் எம்.பி.; தலை[மை]யுரை: காயிதே மில்லத் முக[ம்மது] இசுமாயில்; பேசுவோர்: க. இராசாராம் எம்.பி., பெரியசாமி தூரன், புலவர் மீ. ச. நடேசன், மயிலை சீனி வேங்கடசாமி, காந்திமதி நாதன், டாக்டர் இலக்குவனார்.

இரவு 7-மணி: நாட்டிய நாடகம்; 'சிவகாமியின் சபதம்'—சந்திர காந்தா குழுவினர்.

இரவு 9-மணி: நாடகம்; 'காடக முத்திரையன்'—மனோகர் குழுவினர்.

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

சன. 9 மாலை 5-15: மணி: காஞ்சிபுரம்—திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி—விற்பனைக் குழு நிகழ்ச்சி.

சன. 12 காலை 10 மணி: வி. புதூர்—பொதுமக்கள் சந்திப்பு.

சன. 13: சோழவந்தான் தொகுதியில் திரு. பி. எஸ். மணியம் எம்.எல் ஏ. ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

சன. 14 காலை 8-30 மணிக்கு: போடிநாயக்கனூர் —கூட்டுற[வு] விவசாய வங்கி நிகழ்ச்சி.

சன. 15 காலை: திருப்பத்தூர்—ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு; மாலை 6-30 மணி: மதுரை ஒய். எம். சி ஏ. 82-வது ஆண்டு விழாவில் பங்கேற்பு.

சன. 16: சிங்கம்புணரி.

சன. 17: சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றிய நிகழ்ச்சிகள்.

சன. 18: வெள்ளக்கோயில்—திரு. கே.என். சாமிநாதன் எம் எல் ஏ. ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

சன. 19: திருமதி வி. பி. பழனியம்மாள் எம்.எல்.ஏ. ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

சன. 20: திரு ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

சன. 21: திரு. பி. ஏ. சாமிநாதன் எம்.பி. ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

கலை நிகழ்ச்சிகள்

9—1—68

சீர்காழி ரங்கராசு குழுவினரின் பம்பையாட்டம்—இரவு 6-மணி முதல் 6-30 மணிவரை; மாயூரம் கணக்தர் பொம்மை நாடக சபாவினரின் பொம்மலாட்டம்—6-40 மணி முதல் 7-30 மணிவரை; கோவை இராமசாமி குழுவினரின் நள நாடகக் கும்மி—7-30 மணி முதல் 8-மணிவரை; கோவை இராமசாமி குழுவினரின் ஆனந்தக் கும்மி—8-மணி முதல் 9-40 மணிவரை: கமுதிப் பகுதி கதிர்வேல் குழுவினரின் ஒயில் கும்மி—8-40 மணிமுதல் 9-10 மணிவரை.

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

[எ]ஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் --- சென்னை-3

9--1--68 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு

சாந்தி ஆர்ட்ஸ் தியேட்டர்ஸ் அளிக்கும்

'மிஸ் லாம்பரட்டா'

(நகைச்சுவை நாடகம்)

கட்டணம்: ரூ. 2, 1. காசு 50

11—1—68 வியாழன் மாலை 6-30 மணிக்கு—இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் நடிக்கும் நாடகம் 'தமிழ் எங்கள் உயிர்'

...—1—68 திங்கள் மாலை 6-30 மணிக்கு—நாட்டியப் பேரொளி ...மினியின் 'தசாவதாரம்' நாட்டிய நாடகம் நடைபெறும்.